**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**Case No.** **CC.No.610/2018**

Deposition of **PW-4/ LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | வீரண் | **Age** | : | 46 |
| **Father's Name** | : | வீரமணி | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | டிரைவர் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07 day February 2026.**

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் போடிநாயக்கனூரில் வசித்து டிரைவர் வேலை செய்து வருகிறேன்.வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது .**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2) 2018 ஆம் ஆண்டு எனது மனைவி போடி, பரமசிவன் கோவில் பக்கத்தில் உள்ள சுலோச்சனா என்பவரிடம் 25,000 ரூபாய் கடனாக வாங்கி இருந்தார் என்றும் அதில் 6,100 ரூபாய் 5 தவணைகளாக கட்டி விட்டார் என்றும் மீதித் தொகையை குடும்ப கஷ்டம் காரணமாக கட்ட முடியவில்லை என்றும் 26.11.2018 ஆம் தேதி மாலை 4:30 மணிக்கு சுலோச்சனா எனக்கு போன் செய்து உனது மகனை நான் கடத்தி வைத்திருக்கிறேன் என்றும் உனது மனைவி என்னிடம் வாங்கிய பணத்தை முழுவதும் திருப்பி செலுத்தாவிட்டால் அவரை அனுப்ப முடியாது என்றும் என்னிடம் போன் மூலம் கூறினார் என்றும் நானும் ,எனது மனைவியும் பக்கத்தில் தேடிப் பார்த்தும் எனது மகனை காணவில்லை என்றும் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றபோது எனது மகன் ,

சுப்புலட்சுமி தன்னை அடைத்து வைத்திருந்ததாகவும் அங்கிருந்து தப்பி வந்ததாகவும் எங்களது வீட்டிற்கு வந்து என்னிடமும் ,எனது மனைவியிடமும் கூறினார் என்றும் அதன் பின்பு எனது மகனை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்சமயம் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும், போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.02.07 18:37:16 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**